திட்டப்பணிகளுக்காக

# சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு 'பிஸ்ட்' விருது

சென்னை, மார்ச்.1-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், திட்டப்பணிகளுக்காக இந்தியாவின் தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் மதிப்பு மிக்க 'பிஸ்ட்' விருதுகளை பெற்றுள்ளது. பாதுகாப்பு, தீயணைப்பு மற்றும் அவசரகால உதவித்துறையில் அமைப்பு மற்றும் தனிநபர்களின் அசாதாரண பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. கடந்த 27-ந்தேதி டெல்லியில் நடைபெற்ற பிஸ்ட்-2020 விருது விழாவின் போது பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து வசதிக்களுக்காக இந்த விருதினை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பெற்றுள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் சார்பில் இயக்குனர்(திட்டங்கள்) ராஜீவ் நாராயன் திவேதி, சர்வதேச தலைவர் பங்கஜ் தர்கரிடம் இருந்து விருதினை பெற்றுக்கொண்டார்.